முழுப்பதிப்புரிமையுடையது
All right Reserved

பரீட்சை இல - 04

மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்
Department of Education, North Central Province

"பிரதிபிரபோதா" மாணவர் திறன்காண் மதிப்பீடு -2020

வினாத்தாள்- I

சுட்டெண்..... -

தரம்- 5

நேரம்- 01மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம்** பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும்** உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
01	
02	
03	
04	
05	
06	
07	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டெண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளிவழங்கும் திட்டத்திற்கேற்ப வினாத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்திகிறேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

www.lkedu.lk

Scanned with CamScanner

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER


❁ 01, 02 ஆகிய வினாக்களில் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச் சோடியைத் தெரிவு செய்க.

(01)



(1) (2) (3)


(02)




(1) (2) (3)

❁ 03, 04 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


(03)





(1) (2) (3)

(04)





(1) (2) (3)

❁ 05, 06 ஆகிய வினாக்களில் உள்ள விடுகதைகளுக்கான விடையைத் தெரிவுசெய்க.

(05) சீருடை இல்லாத காவலாளி, சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
(1) மனிதன் (2) பறவை (3) நாய்

(06) இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக் கொள்ள வேண்டும் அவன் யார்?
(1) மேசை (2) ஏணி (3) கதிரை

www.lkedu.lk

Scanned with CamScanner

சுட்டெண்..... -

❁ தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகின்றாய்
வண்ணக் குயில் குஞ்சுகள்
வளர்ப்பு தாயும் நீயாவாய்!

விட்டுக் கொடுத்து வாழும்
வித்தை எங்கு கற்றீரோ?
கற்கும் சிறுவர் மனத்திலே
கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்.

(07) இக்கவிதையில் வருவது,

(1) காகத்தைப் பற்றி (2) மனிதனைப் பற்றி (3) நாயைப் பற்றி

(08) இக்கவிதையில் **கற்கும் சிறுவர் மனத்திலே கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்** என்பதன் கருத்து யாது?


(1) மிகக் கவனமாயிருத்தல் வேண்டும்.

(2) எல்லோருடனும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்


(3) உரிய காலத்தில் படிக்க வேண்டும்.

❁ எண்கள் இடப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


(09)



(1) 36




(2) 42




(3) 45


(10)



(1) 2



(2) 4



(3) 6

(11) பெட்டியொன்றிலே சவர்க்காரக் கட்டிகள் 20 அல்லது பிஸ்கட் பக்கற்றுகள் 15ஐ மட்டுமே வைப்பதற்கு இடவசதி உள்ளது. அந்தப் பெட்டியிலே 6 பிஸ்கட் பக்கற்றுக்களுடன் எத்தனை சவர்க்காரக் கட்டிகளை வைக்க முடியும்?

(1) 12 (2) 15 (3) 16

www.lkedu.lk

Scanned with CamScanner

❁ பின்வரும் கூற்றுக்கு பொருத்தமான பழமொழிகளைத் தெரிக.

(12) பாடசாலையில் ஆண்டிறுதியில் நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்கு இன்னும் இரண்டு தினங்களே உள்ளன. பாடசாலைச் சூழல் மிகவும் அழகாக இருப்பதற்கு துப்பரவு செய்வது எவ்வாறு என்று ஆசிரியர்கள் யோசித்தனர். மாணவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒருசில மணி நேரத்தில் அதனை செய்து முடித்தனர். இந்நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி எது?

(1) சிறுதுளி பெரு வெள்ளம்.

(2) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

(3) பலசாலியும் தோல்வியடையலாம்.

(13) ரவியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒருநாள் ரவியின் வீட்டிற்கு வந்த மாமா அவனிடம் கேட்ட பொது அறிவுக் கேள்விக்கு அவனால் விடை கூற முடியவில்லை, இந்நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி எது?

(1) நிறைகுடம் தளம்பாது.

(2) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

(3) ஆனைக்கும் அடி சறுக்கும்.

(14) 1 தொடக்கம் 20 வரை உள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 80 (2) 110 (3) 120

(15) 2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முதலாம் திகதி வியாழக்கிழமையாகும். அம் மாதத்தில் உள்ள வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 4 (3) 5

(16) வட்டவடிவமான ஒரு காணித்துண்டைச் சுற்றி 16 தூண்கள் நடப்பட்டிருந்தன. இரண்டு தூண்களுக்கிடையிலான தூரம் 2m எனின், காணித்துண்டை சுற்றிவர உள்ள மொத்த தூரம் யாது?

(1) 26 m (2) 32 m (3) 30 m

(17) 1 3 4 3 2 5 6 7 2 4 இவ்வெண்களில் எல்லா இரட்டை எண்களையும் நீக்கியதன் பின்பு வரும் மிகப் பெரிய எண் யாது?

(1) 53371 (2) 73531 (3) 75331


(18) ரோஜா ராணியிடம் "உனது தந்தையின் மனைவியின் தங்கை எனக்கு சிறிய தாய்" எனக் கூறினார். ரோஜா ராணிக்கு என்ன உறவு முறை?

(1) தங்கை (2) மகள் (3) மாமி

www.lkedu.lk

Scanned with CamScanner

❁ கீழே காணப்படும் உருவை அவதானித்து வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.



(19) வட்டத்திற்கு மட்டும் உரிய எழுத்து எது?

(1) ண (2) இ (3) அ

(20) " இ " என்ற எழுத்துடன் தொடர்புடைய கூற்றைத் தெரிவு செய்க.

(1) வட்டத்திற்கும் முக்கோணிக்கும் உரியவை

(2) வட்டம் முக்கோணி, செவ்வகம் ஆகிய மூன்றிற்கும் உரியவை

(3) வட்டத்திற்கும் செவ்வகத்திற்கும் உரியவை


(21) 10 ரம்புட்டான் பழங்களை ரூபா 100 இற்கு வாங்கி ரூபா 250 இற்கு விற்றான். எனின் ஒரு ரம்புட்டான் பழத்தை விற்பதனால் கிடைத்த இலாபம் யாது?

(1) ரூபா 20 (2) ரூபா 10 (3) ரூபா 15

(22) குமார் காலையில் 09.35 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு பேருந்து நிலையத்தை 40 நிமிடத்தில் சென்றடைந்தான். அங்கு சென்ற போது கண்டிக்கு செல்லும் பேருந்து 10 நிமிடத்திற்கு முன்பாக புறப்பட்டு சென்றதாக கூறப்பட்டது. பேருந்து சென்ற நேரம் யாது?


(1) மு.ப.10.05 (2) மு.ப. 10.10 (3) மு.ப. 10.15

(23) உருக்களின் கோலத்தை விளங்கி இடைவெளியில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



(1)  (2)  (3) 

(24) இத்திண்மத்திலுள்ள முகங்களின் எண்ணிக்கை.





(1) 10
(2) 8
(3) 6

www.lkedu.lk


Scanned with CamScanner

❁ தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

(25) 




(1) (2) (3)

(26) 



(1) (2) (3)

❁ தரப்பட்டுள்ள பெறுமானத்தை அவதானித்து 27, 28 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.



(27) ◇ இன் பெறுமானம் யாது?

(1) 2 (2) 3 (3) 4

(28) ◇ + ○ + ⬠ = ... இன் பெறுமானம் யாது?

(1) 9 (2) 14 (3) 20

(29) ஒரு வரிசையில் ஜீவன் வலது பக்கத்திலிருந்து 8 ஆவது ஆகவும் சிவா இடது பக்கத்திலிருந்து 6ஆவது ஆகவும் நிற்கின்றனர். அவ்வரிசையில் மொத்தம் 23 பேர் உள்ளனர் எனின், ஜீவனுக்கும் சிவாவிற்கும் இடையே எத்தனை பேர் உள்ளனர்?

(1) 9 (2) 14 (3) 20


www.lkedu.lk

Scanned with CamScanner

(30) மைதானமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டிகளினதும் வேன்களினதும் மொத்த எண்ணிக்கை 21 ஆகும். அவற்றில் உள்ள சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 70 ஆகும். மைதானத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கையும் வேன்களின் எண்ணிக்கையும் யாவை?

(1) முச்சக்கரவண்டிகள் 5 வேன்கள் 12
(2) முச்சக்கரவண்டிகள் 12 வேன்கள் 9
(3) முச்சக்கரவண்டிகள் 14 வேன்கள் 7

(31) முழு உருவத்தினதும் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்



(1) நான்கு மடங்கு
(2) மூன்று மடங்கு
(3) இரண்டு மடங்கு

(32) நிமலன் 2009 ஆம் ஆண்டில் பிறந்தான். இதன்படி நிமலன் பிறந்தது,

(1) 20ஆம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தம்
(2) 21ஆம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தம்
(3) 21ஆம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தம்


(33) குமார் A எனும் இடத்திலிருந்து மேற்குத் திசைநோக்கி 100 மீற்றர் பயணஞ் செய்து வலப்பக்கமாக திரும்பி 50 மீற்றர் பயணம் செய்கிறார். பின்னர் அங்கிருந்து மீண்டும் வலப்பக்கமாக திரும்பி 100 மீற்றர் பயணஞ் செய்து B எனும் இடத்தை அடைகிறார். அவர் பயணத்தை ஆரம்பித்த இடத்தை அடைவதற்கு வலப்பக்கமாக திரும்பி மேலும் எத்தனை மீற்றர் செல்ல வேண்டும்.

(1) 50 (2) 150 (3) 250

❁ தரப்படும் குறுக்கெழுத்து கட்டங்களில் வரவேண்டிய எழுத்துக்களை இட்டு பூர்த்தி செய்வதன் மூலம் 34, 35 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

(34) இடமிருந்து வலம் வரவேண்டிய எழுத்துக்கள் முறையே.

(1) பொ,து,க்
(2) வ, து, ம்
(3) வி, ம், த்



(35) மேலிருந்து கீழ் வரவேண்டிய எழுத்துக்கள் முறையே,

(1) வி, து, மி (2) தொ, க், சி (3) ம, ந், து

(36) விமலன் ஒரு இனிப்புப் பண்டத்தை இருசம துண்டுகளாக வெட்டி ஒரு துண்டை மேலும் இரு சமதுண்டுகளாக வெட்டினான். ஒரு துண்டின் நிறை 40g மொத்தமாக விமலிடம் 9 இனிப்புத் துண்டுகள் இருந்தால் அவனிடம் இருந்த மொத்த இனிப்புத் துண்டுகளின் நிறை எவ்வளவு?

(1) 1200g (2) 1320g (3) 1440g

www.lkedu.lk

Scanned with CamScanner

(37) ஒரு நோயாளி தினமும் காலை, மதியம், இரவு வேளைகளில் 2 மருந்து வில்லைகள் வீதம் உட்கொள்வார் 48 மருந்து வில்லைகள் அடங்கிய பக்கட் ஒன்று இவருக்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

(1) 9 (2) 8 (3) 7

(38) சுகுமாரின் ஊருக்கு ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றது. காலையில் பாடசாலை மாணவர்களையும் வேலைக்கு செல்பவர்களையும் ஏற்றிவரும் பேருந்து மாலை ஐந்து மணிக்கு மீண்டும் அவனது ஊருக்குத் திரும்பிச் செல்லும். தினமும் தவறாது பாடசாலைக்கு பேருந்தில் வரும் சுகுமார் இன்று பாடசாலைக்கு வரவில்லை.


அவன் பாடசாலைக்கு சமூகமளிக்காமைக்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?

(1) பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றமை.

(2) பேருந்து சேவையில் ஈடுபடாமை

(3) பேருந்தை அவன் தவறவிட்டமை.

❁ தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி கேட்கப்படும் வினாவுக்கு விடை தருக.



(39) உருவுக்கமைய கூறக்கூடிய பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?

(1) ஆங்கில பாடத்தை விரும்பக் கூடியவர்கள் நான்கு பேராவர்.

(2) சிங்களம், கணிதத்தை மட்டும் விரும்புவோர் இருவர்.

(3) சிங்களத்தை விரும்புவோர் இருவர்.

(40) ஏதேனும் இரண்டு பாடங்களை மாத்திரம் படிக்க விரும்பும் பிள்ளைகள் யாவர்?

(1) N, E,M (2) E, C, M (3) A, C, B

www.ikedu.lk

Scanned with CamScanner

முழுப்பதிப்புரிமையுடையது
All right Reserved

பரீட்சை இல 04

மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்
Department of Education, North Central Province

"பிரதிபிரபோதா" மாணவர் திறன்காண் மதிப்பீடு-2020

வினாத்தாள்- II

சுட்டெண்..... -

தரம் -5

நேரம்- 01மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம்** பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும்** உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடையின் கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம்** இடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள **வினாக்களில்** சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
01	
02	
03	
04	
05	
06	
07	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டெண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளிவழங்கும் திட்டத்திற்கேற்ப வினாத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்திகிறேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

www.lkedu.lk

Scanned with CamScanner

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப் பந்துபோல மெதுவாக மேலெழுகிறான். கதிரவனைக் கண்ட நிலவுமகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள். கடிகாரப் பறவைகளான சேவல்களும், கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிந்து, கதிரவனை வரவேற்கின்றன. ஆலயங்களின் காண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்க கூட்டங்கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) பந்தியில் வர்ணிக்கப்படும் காட்சி எவ்வேளைக்குரியது?

.....

(ii) அடைமொழிச் சொல்லொன்றை பந்தியில் இருந்து எழுதுக.

.....

(iii) உயர்திணை ஒருமைப் பெண்பால் பெயர்ச்சொல் ஒன்றை பந்தியிலிருந்து எழுதுக.

.....

(iv) இங்கு கதிரவனை வரவேற்பவை எவை?

.....

(v) பறவைகள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

.....

(vi) இங்கு சூழலை இனிமையாக்குவது எது?

.....

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) குளத்தில் ..... (அள்ளி / அல்லி) மலர்கள் மலர்ந்திருந்தன.

(ii) அம்மா வாங்கி வந்த பானையில் ஒரு சிறிய ..... (கோறை / கோரை) உள்ளது.

3. பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) தமிழில் உள்ள முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை .....
(முப்பது / பதினெட்டு)

(ii) மெல்லின எழுத்தைக் கொண்டமைந்துள்ள சொல் .....
(குஞ்சு / மூக்கு)

(iii) தரப்பட்ட சொற்களுள் இருபால் பொதுப்பெயர்ச்சொல் .....
(அதிபர் / குதிரைகள்)

(iv) உயர்திணை பன்மை முன்னிலைப் பெயர்ச்சொல் .....
(நாங்கள் / நீங்கள்)

www.lkedu.lk

Scanned with CamScanner

சுட்டெண்..... -

4. பொருத்தமான விடை எழுதுக.

(i) வெள்ளை முயல் துள்ளி ஓடியது. இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய் அடைமொழி

.....

(ii) ஏழைகளுக்கு இரக்கம் காட்ட வேண்டும். இவ் வாக்கியத்தில் உள்ள குணப் பெயர்ச் சொல்

.....

5. கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி பழமொழியை பூரணப்படுத்துக.

அடம்பன் கொடியும் ..... மிடுக்கு.

6. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.

வீண் செலவுகள் செய்பவன் :.....

7. வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் ..... (போன்றன / போன்றது)

(ii) தோட்டத்தில் அழகான மலர் ..... (மலர்ந்துள்ளது / மலர்ந்துள்ளன)

8. பொருத்தமான விடை எழுதுக.

(i) பாங்கன் என்பதன் எதிர்ப்பாற் சொல் .....

(ii) பெருமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல் .....

9. பின்வரும் பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்கில் எழுதுக.

சவுக்காரம் :.....

10. கீழே தரப்பட்டுள்ள பாடலில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

மீனினம் ஓடிப் பறக்குதம்மா - ஊடே

.....


வானுங் கடலாக மாறுதம்மா - இந்த

மாட்சியி லுள்ளம் மூழ்குதம்மா.

11. (1) கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) National flag :..... (ii) Birds :.....

(2) கீழே தரப்பட்டுள்ள பிராணியின் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.



.....

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

How old are you? .....

13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

பிறந்தநாள் வாழ்த்துக்கள் :.....

14. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

கிரவா கொள பாடய் :.....

www.lkedu.lk


Scanned with CamScanner

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

உங்களுக்கு மாம்பழம் வேண்டுமா?

.....

16. படத்தை அவதானித்து மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)



- .....
  .....
- .....
  .....
- .....
  .....

17. (i) "முப்பத்தாறாயிரத்து அறுபத்தொன்பது" என்னும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

.....

(ii) 75 303 எனும் எண்ணை எழுத்தில் எழுதுக.

.....

18. அடைப்பினுள் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண், மிகச் சிறிய எண் என்பவற்றை எழுதுக

மிகப்பெரிய எண் ..... மிகச்சிறிய எண் .....

9		2
	0	
1		5

19. பத்திரிகை விற்பனை நிலையமொன்றில் திங்களன்று 2684 தமிழ் பத்திரிகைகளும் 908 ஆங்கிலப் பத்திரிகைகளும் விற்பனை செய்யப்பட்டன. அன்றைய தினம் விற்கப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை யாது?.....

20. தோட்டமொன்றில் ஜனவரி மாதம் 4389 தேங்காய்களும் பெப்ரவரி மாதம் 6435 தேங்காய்களும் பறிக்கப்பட்டன. ஜனவரியை விட பெப்ரவரியில் எத்தனை தேங்காய்கள் அதிகமாகப் பறிக்கப்பட்டுள்ளன? .....

21. கூடை ஒன்றில் இருந்த மங்குஸ்தான் பழங்களுள் ¾ பங்கு விற்கப்பட்ட பின்னர் 35 பழங்கள் மீதமாக இருந்தன. எனின், ஆரம்பத்தில் கூடையில் இருந்த மங்குஸ்தான் பழங்கள் எத்தனை?

.....

www.lkedu.lk

Scanned with CamScanner

22.  உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக.

.....

23. கூடையொன்றில் 140 மங்குஸ்தான் பழங்கள் உள்ளன. அவ்வாறான நான்கு கூடைகளில் எத்தனை மங்குஸ்தான் பழங்கள் காணப்படும்? .....

24. வகுப்பொன்றில் உள்ள 35 பிள்ளைகளுக்கு 3 கொப்பிகள் வீதம் வழங்குவதாயின், எத்தனை கொப்பிகள் தேவைப்படும்? .....

25. இருபத்து நான்கு மணிநேரக் கடிகாரத்தில் 19:30 எனக் காட்டும் நேரத்தை தரப்பட்டுள்ள பன்னிரண்டு மணி நேரக்கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக




26. மு.ப. 10.45 இற்கு ஆரம்பமான மாணவர் மன்ற நிகழ்ச்சி 1மணித்தியாலம் 30 நிமிடங்கள் நடைபெற்றது. நிகழ்ச்சி முடிவடைந்த நேரம் யாது? பி.ப. .....

27. வியாபாரி ஒருவர் விற்பனைக்காகக் கொண்டு வந்த 628 பழங்களை சம எண்ணிக்கையில் இருக்குமாறு ஐந்து பெட்டிகளில் இட்ட பின்னர் சில பழங்கள் மீதியாக இருந்தன.

(i) பெட்டியொன்றில் எத்தனை பழங்களை இட்டிருப்பார்? .....

(ii) எஞ்சியிருந்த பழங்கள் எத்தனை? .....

28.  உருவில் உள்ள இரண்டு வடிவங்களினதும் சமச்சீர் அச்சுக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

29. 

(i) உருவில் உள்ள திண்மத்தின் பெயர் யாது? .....

(ii) முகங்களின் எண்ணிக்கை எத்தனை? .....

(iii) உச்சிகளின் எண்ணிக்கை எத்தனை? .....

30. கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த விலைப்பட்டியலின் பகுதி பின்வருமாறு.

1kg சீனி	= ரூபாய் 120.00
250g தேயிலை	= ரூபாய் 225.00
1லீற்றர் தேங்காயெண்ணெய்	= ரூபாய் 300.00

www.lkedu.lk

Scanned with CamScanner

விலைப்பட்டியலைப் பயன்படுத்தி கீழே உள்ள சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	அளவு	செலுத்திய பணம்	
		ரூபாய்	சதம்
சீனி	500 g	60	oo
தேங்காயெண்ணை	500ml	……	……
தேயிலை	1 kg	……	……
மொத்தம்		……	……

- 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து **அதன் கீழக் கோடிடுக.**

31. வருடம் முழுவதும் பூத்துக் காய்க்கும் தாவர வகை எது?
(1) தென்னை (2) றம்புட்டான் (3) பலா

32. சமாந்தரமான நரம்புகளைக் கொண்ட தாவர இலை
(1) முந்திரி (2) பலா (3) சோளம்

33. விலங்குகளால் பரம்பலடையும் வித்து
(1) கடல்மாங்காய் (2) ஆடையொட்டி (3) எண்ணை

34. நகருயிர் (ஊர்வன) வகைக்குள் அடங்கும் பிராணி வகை
(1) தவளை (2) சிலந்தி (3) முதலை

35. பின்வரும் விலங்குகளில் ஈரூடக வாழியாக கருதப்படும் விலங்கு
(1) ஆமை (2) முதலை (3) பாம்பு

36. பின்வரும் விலங்குகளில் ஊன் உண்ணி விலங்கினம்
(1) பூனை (2) தும்பி (3) மான்

37 இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கினம்
(1) கருங்குரங்கு (2) மள்புளூட்டா (3) யானை

38. ஒரு நபருக்கு கொரோனா தொற்று ஏற்படின் அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(1) 1999 (2) 1390 (3) 1119

39. இலங்கையின் தேசிய விளையாட்டில் ஒரு குழுவில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை
(1) 12 (2) 7 (3) 6

40. இலங்கையில் உள்ள உலக மரபுரிமைகளில் ஒன்று
(1) திருகோணமலைத் துறைமுகம் (2) கட்டுநாயக்க விமான நிலையம் (3) மகாபோதி விருட்சம்

www.lkedu.lk

Scanned with CamScanner

41. எமக்கு சேவைகள் வழங்கும் உள்ளூராட்சி நிறுவனங்களில் ஒன்று
(1) பிரதேச சபை (2) மாவட்ட செயலகம் (3) பொலிஸ் நிலையம்

42. தென்னை தாவரத்தில் காணப்படும் வேர்
(1)தாங்கு வேர் (2) காற்று வேர் (3) நார்வேர்

43. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாடுகளின் படிமுறையில் மூன்றாவதாக இடம் பெறுவது
(1) மனவுறுதி (2) பிரார்த்தனை (3) மலர்வு

44. சூரிய நமஸ்கார செயற்பாட்டின் படிமுறைகளின் எண்ணிக்கை
(1) பத்து (2) பன்னிரண்டு (3) பதின்மூன்று

45. ஒருவர் மாத்திரம் தனியாகப் பயன்படுத்தும் பொருள்
(1) கட்டில் (2) தலையணை (3) அலுமாரி

46. அனல் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் வலுசக்தி
(1) சூரிய ஒளி (2) நிலக்கரி (3) எரிவாயு

47. பின்வரும் நோய்களுள் தொற்றாத நோய்
(1) வாந்திபேதி (2) புற்றுநோய் (3) காசநோய்

48. உடலுக்கு அதிகளவில் சக்தி தரும் போசணை
(1) புரதம் (2) காபோவைதரேற்று (3) விற்றமின்

49. கடும் பச்சைநிற காய்கறிகளில் காணப்படும் போசனை
(1) புரதம் (2) இரும்பு (3) விற்றமின் D

50. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர்
(1) டீ.எஸ் .சேனநாயக்க (2) எப். ஆர். சேனநாயக்க (3) மஹிந்த ராஜபக்ஷ

51. வண்டுகள் போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும் வித்துக்கள்
(1)ரம்புட்டான் (2) நெருஞ்சி (3)ஆமணக்கு

52. பின்வரும் தகவல் ஊடகங்களுள் இலத்திரனியல் ஊடகம்
(1) பத்திரிகை (2) தொலைக்காட்சி (3) விளம்பரங்கள்

53. தொடர்பாடலின்போது தொடர்பாடற் கூறுகளில் தொடர்புபடுத்தப்படாதது
(1) அனுப்புநர் (2) செய்தி (3)பெறுநர்

54. ஊவா மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள மாவட்டம்
(1)இரத்தினபுரி (2) மாத்தளை (3) மொனராகலை

55. அந்தமில்லா சங்கிலியுடன் பெரிய பற்சில்லு, சிறிய பற்சில்லு என்பன இணைக்கப்பட்டு இயங்கும் உபகரணம்
(1) தையல் இயந்திரம் (2) துவிச்சக்கரவண்டி (3) தைனமோ

www.lkedu.lk

Scanned with CamScanner

56. காந்தத்தால் கவரப்படும் பொருள்

(1) காகிதக்கவ்வி (2) அலுமினியத்தகடு (3) செம்புத்தகடு

57. மின்காந்த அமைப்பைக் கொண்டுள்ள பொருள்

(1) மின்மணி (2) மின்சோதிப்பான் (3) மின்கலம்

58. உப்பு நீரில் விதை நெல்லை இட்டு எவ்வாறு தெரிவு செய்யலாம்

(1) விதைகள் உப்பு நீரில் மிதக்கும்
(2) விதைகள் உப்பு நீரில் அமிழும்
(3) விதைகள் உப்பு நீரில் நிறம்மாறும்

59. பின்வருவனவற்றில் திரள் பழம் எது

(1)திராட்சை (2)மா (3)சீத்தா

60. புறவன் கூட்டை உடைய பிராணி

(1) பறவைகள் (2) பூச்சிகள் (3) முலையூட்டிகள்



Scanned with CamScanner